**ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்**

*காஞ்சிபுரம் - 631502*

*தொ.பே: 044 - 27222609*

## **காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில்**
## **ஸகஸ்ர தீப அலங்கார சேவை**

***ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்*** *அருளாணையின் வண்ணம் காஞ்சிபுரம், ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில் உள்ள வசந்த மண்டபத்தில் ஒவ்வொரு மாதமும் அஷ்டமி திதி அன்று ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு ஸகஸ்ர தீப அலங்கார சேவை மாலை 7:00 மணி அளவில் நடைபெறும்.*

*இந்த விசேஷ சேவையில் வசந்த மண்டபத்தைச் சுற்றிலும் ஆயிரம் தீபங்கள் ஏற்றப்பட்டு உற்சவ காமாட்சி விசேஷ அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சியளிப்பாள். அந்த சமயத்தில் வேத விற்பன்னர்களின் வேத கோஷம் முழங்க, சங்கீத சமர்ப்பணத்துடன் விசேஷ பூஜைகள் தீபாராதனைகள் நடைபெறும்.*

*இந்த சேவையில் ஈடுபடுபவர்களுடைய வாழ்வில் கஷ்டங்கள் எல்லாம் அகன்று, சகல சௌபாக்கியங்களையும் அம்பாள் அனுக்ரஹம் செய்கின்றாள். இச் சேவையில் ஒருவர் மட்டுமே தங்கள் குடும்பத்துடன் பங்கேற்றுக்கொள்ள முடியும். ரூபாய் 15000/- கட்டி ரசீது பெற்றுக் கொண்டு இந்த ஸகஸ்ர தீப அலங்கார சேவையில் ஈடுபட்டு சகலவிதமான சௌபாக்கியங்களுக்கும் பாத்திரராகும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

*மேலும் தொடர்புகளுக்கு: ஸ்ரீ சூரிய நாராயணன் – 9443940722*
*ஸ்ரீ பத்ரி நாராயணன் – 9894433002*

- ***N. சுந்தரேசன்***

*ஸ்ரீ கார்யம்*